# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



Applicant 193

நகர் ஊரமைப்புத் துறை

**துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம்**

**அவர்களின் நடவடிக்கைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. கி.சண்முகம், எம்.இ.,எம்.பி.ஏ.,**

---

**ந.க.எண்.773/2022/கிமா** **நாள்: 29.04.2022**

---

**ஐயா,**

**பொருள் :** **மனைப்பிரிவு** – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி வட்டம் – காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் – எர்ரஹள்ளி ஊராட்சி – எர்ரஹள்ளி–1 கிராமம் – சர்வே எண்கள்.47/1D, 2B, 48/1C1C1, 49/2A1A, 50/1–ல் 2.40.60 ஹெக்டேர் (அ) 24060.00ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி கோரியது – தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. மனுதாரர், திரு M. கார்த்திகேயன், காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி அவர்களின் விண்ணப்பம் நாள்.24.03.2022.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
3. அரசானண எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
4. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
5. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
6. அரசானண எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
7. அரசானண எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
8. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686.2017/LA1, நாள்.08.09.2017.
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.
10. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.26.03.2022 (சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டது.)
11. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.22.04.2022 (நன்னிலை வரி, செலுத்தக்கோரியது.)
12. மனுதாரர், திரு M. கார்த்திகேயன், காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி அவர்கள் நன்னிலைவரி கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள்.29.04.2022

---------

..2

— கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், எர்ரஹள்ளி ஊராட்சி, எர்ரஹள்ளி–1 கிராமம், சர்வே எண்கள்.47/1D, 2B, 48/1C1C1, 49/2A1A, 50/1–ல் 2.40.60 ஹெக்டேர் (அ) 24060.00ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி கோரி, பார்வை 1–ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 10–ல் சுட்டிய இவ்வலுவலகக் கடிதம் நாள்.26.03.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேற்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி, தானப்பத்திர எண்.1831/2022, நாள்.20.04.2022–ல் சாலைகள், பூங்கா, புல்வெளி மற்றும் உள்ளாட்சி பொது ஒதுக்கீடு ஆகியவற்றை ஊராட்சிமன்ற தலைவர், எர்ரஹள்ளி ஊராட்சி அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டும், மற்றும் தானப்பத்திரம் எண்.1832/2022 நாள்.20.04.2022 -ல் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான பொது ஒதுக்கீட்டினை கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | 2.40.60 ஹெக்டேர் (அ) 24060.00 ச.மீ |
| கோரிய மனைகள் | 103 |
| ஒதுக்கிய மனைகள் | 101 |
| EWS மனைகள் | 1755.85 ச.மீ (10.36%)<br>மனை எண்.47 முதல் 53 வரை<br>(ம) 57 முதல் 76 வரை (27 மனைகள்) |
| <u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை</u> | |
| 1) மனைப்பிரிவின் சாலை பரப்பு | 7107.38 ச.மீ |
| பூங்கா – I 668.90 ச.மீ<br>பூங்கா –II 402.61 ச.மீ<br>பூங்கா – III 643.68 ச.மீ | 1715.19 ச.மீ (10.11%) |
| 2) புல்வெளி<br>கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்ட பகுதி | 101.32 ச.மீ |
| 3) உள்ளாட்சிக்கான பொது உபயோகம் | 96.57 ச.மீ (0.56%) |
| 4) தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகம் | 93.02 ச.மீ (0.54%) |

மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ(கி.மா)எண்.41/2022 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

195

2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் அசல் பத்திர நகல் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை:</u>

1. (a) பார்வை 7–ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 5–ல் காணும் TNCDBR–2019விதி எண்.47 (11)–ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays Tar Roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2021–ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 9 மற்றும் 8–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the TamilNadu Real Estate (Regulation & Development) Act 2016.The promotor has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be,in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 4-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி / திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி சுவராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாக கீழ்காணும் அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**Head of Account**

" 0217 Urban Development – 60 Other Urban
Development Schemes –800 Other Receipts–AS
Receipts Under Land use conversion Charges–27
Non – Taxation fees 09 collections
D.P.CodeNo.0217 –60– 800–AS–22709

6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

197

7. பார்வை 3 மற்றும் 5–ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலைவரி ரூ.30,900/–ம், கொடிநாள் நிதி ரூ.6,200/–ம் மற்றும் மற்றும் காட்சிபலகை கட்டணம் மற்றும் ரூ.11,500/–ம் மனுதாரர் செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

8. The Order is passed subject to the outcome of the writ petition WP (MD) No.8948 of 2019.

29/4

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர்.

29/4/22

**இணைப்பு:**
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திரம்)

**பெறுநர்:**
ஊராட்சிமன்ற தலைவர்,
எர்ரஹள்ளி ஊராட்சி மன்ற அலுவலகம்,
எர்ரஹள்ளி ஊராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**நகல்:**

1) திரு M. கார்த்திகேயன்,
த/பெ. K.P. முனுசாமி,
1, ஜின்னா தெரு,
சேலம் மெயின் ரோடு,
காவேரிப்பட்டினம் – 635112,
கிருஷ்ணகிரி மாவட்டம். — உத்தரவுக் கடிதம் மட்டும்

2) The Chairman
Tamilnadu Real Estate
Regulatory Authority,
No.1A, 1st Floor, CMDA Tower – 2,
Egmore, Chennai – 600 008. — வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)

3) உதவி இயக்குநர்,
நில அளவியல் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம். — (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)

4) சார் பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
பாலக்கோடு ரோடு,
காவேரிப்பட்டினம் – 635 112,
கிருஷ்ணகிரி மாவட்டம். — (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)

## எர்ரஅள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : திருமதி.டி.செந்தாமரை

ந.க.எண்.02 / 2022-2023 நாள். 17.05.2022

பொருள் : மனைப் பிரிவு அங்கீகாரம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - எர்ரஅள்ளி ஊராட்சி - எர்ரஅள்ளி-1 வருவாய் கிராமம் / சர்வே எண்.47/1D, 47/2B, 48/1C 1C1, 49/2A1A, 50/1 – ல் 5.95 ஏக்கர் - 24060 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப் பிரிவு - கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு, ஒசூர் துணை இயக்குநரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கியது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசு ஆணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை நாள்.04.05.2017.
2. நகர் ஊரகமைப்பு துணை இயக்குநர்(பொ) கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.773/2022/கி.மா. நாள்.29.04.2022.
3. காவேரிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.1831/2022 நாள்.20.04.2022.
4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.773/2022/கி.மா. நாள்.26.03.2022.
5. எர்ரஅள்ளி ஊராட்சி சாதாரண கூட்டம் தீர்மானம் எண்.05/ நாள்.17.05.2022.
6. திரு.மு.கார்த்திகேயன்,த/பெ.கே.பி.முனுசாமி,ஜின்னாதெரு, சேலம் மெயின்ரோடு, காவேரிப்பட்டிணம் என்பவரின் மனு நாள்.24.03.2022.

------------

**உத்தரவு :-**

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், எர்ரஅள்ளி ஊராட்சி, எர்ரஅள்ளி-1 வருவாய் கிராமம் சர்வே எண். 47/1D, 47/2B, 48/1C 1C1, 49/2A1A, 50/1 – ல் 5.95 ஏக்கர், 24060 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ந/ஊ/து.இ.(கி.மா) எண்.41/2022/கிமா எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி பார்வை 5-ல் காணும் கடிதத்தின்படி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப் பிரிவினை வரண்முறைப்படுத்திட உள்ளாட்சி நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலைகள் மற்றும் காலியிடம் ஆகியவற்றை நிர்ணயம் செய்து அவற்றை ஒப்படைக்கவும் துணை இயக்குநர்(பொ), தமிழ்நாடு அரசு ஊரமைப்பு துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களால் பார்வை 2-ல் காணும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைப் பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் ஊராட்சிக்கான இடம் ஆகியவை மனுதாரரால் காவேரிப்பட்டிணம சார்பதிவாளர் அலுவலக தான பத்திர எண்.1831/2022 நாள்.20.04.2022 அன்று எர்ரஅள்ளி ஊராட்சி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரில் தானப் பத்திரம் செய்து எர்ரஅள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

..2..

பார்வை 1-ல் காணும் அரசாணை எண்.79-ன்படி நிலப்பயன் மாற்றக் கட்டணம் மனையிடப்பரப்பின் சந்தை மதிப்பீட்டில் (Market Value )3% ரூ.479992/- (ரூபாய் நான்கு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று இரண்டு மட்டும்) 09.05.2022ஆம் தேதியில் கிருஷ்ணகிரி கருவூலக் கணக்கு 'e' Payment Challan No.20220509009377 மூலம் உரிய அரசு தலைப்பிலும், ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணம் ரூ.101000 (ரூ.1000/- வீதம் 101 மனைகள் ) 10.05.2022-ல் ஊராட்சியிலும் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், நன்னிலை வரி 25.04.2022-ல் Challan No.20220425008520 செலுத்தி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி அவர்களிடம் 25.04.2022-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எர்ரஅள்ளி ஊராட்சி தீர்மான எண்.5 நாள்.17.05.2022-ன்படி பூங்காவனம் நகர் என்று புதிய வீட்டுமனைப் பிரிவு அமைத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், எர்ரஅள்ளி ஊராட்சி, எர்ரஅள்ளி-1 வருவாய் கிராம சர்வே எண். 47/1D, 47/2B, 48/1C 1C1, 49/2A1A, 50/1 – ல் 5.95 ஏக்கர் 24060 சதுர மீட்டர் பரப்பளவில் வரைபடத்தில் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள 101 மனைகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் வழி உத்தரவிடப்பட்டுள்ளது.

## நிபந்தனைகள்

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் கழிவுநீர், மழைநீர் கால்வாய் பொது பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம், அதிய உயர் மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்கக் கூடாது.

2. தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு வரைபடங்களில் குறிப்பிட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

3. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப் பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை துணை இயக்குநர்(பொ) தமிழ்நாடு அரசு நகர் ஊரமைப்பு துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களின் பார்வை-5ல் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. மனைப் பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் எர்ரஅள்ளி ஊராட்சியின் தலைவர் அவர்களிடம் கட்டிட அனுமதி பெறப்பட வேண்டும்.

5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

6. இம்மனைப் பிரிவின் நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நிலுவையிலிருந்து தீர்ப்பு எதிராக வரப்பெற்றின் இறுதி ஒப்புதல் வழங்கிய உத்தரவு இரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. தொழில்நுட்ப அனுமதி வழங்கிட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மண்டலம் அவர்களின் கடிதத்துடன் அளிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளும் பொருந்தும்.

PRESIDENT
தலைவர்,
Erraiahalli Panchayat
எர்ரஅள்ளி ஊராட்சி
Kaveripattinam Union

பெறுதல்

திரு.மு.கார்த்திகேயன்,
த/பெ.கே.பி.முனுசாமி,
ஜின்னாதெரு,
சேலம் மெயின்ரோடு,
காவேரிப்பட்டிணம் - 635112,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

நகல் :-

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), கிருஷ்ணகிரி மாவட்டம் தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், காவேரிப்பட்டிணம்.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், காவேரிப்பட்டிணம்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate